**தொடங்கொட பிரதேச சபை**

**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதியும் திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2018 ஒக்தோபர் 08 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தொடங்கொட பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிலையான சொத்துக் கணக்கு மீதியும், மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு மீதியும் சமமாக இருக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் அந்த இரண்டு கணக்குகளுக்கிடையே ரூபா 3,028,092 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 2,156,052 தொகையான கணக்கு விடயத்திற்குரிய மீதிக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிக்கும் இடையே ரூபா 550,187 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

நீண்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற வீதி விளக்கு பராமரிப்பிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 1,545,121 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

நீண்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 285,974 தொகையான பெறுமதிசேர் வரித் (VAT) தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 599,874 தொகையான வேலைக் கடன்பட்டோர் மீதியை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | | |
| (i) 134(1) ஆம் பிரிவு | - | அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட பிரதேசங்களில் உள்ளடக்கியுள்ள அமைந்துள்ள சகல அசைவுறாக ஆதனங்கள் அல்லது அசையாத யாதேனும் ஒரு ஆதனம் தொடர்பாக வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் ஆதன வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 143(1) ஆம் பிரிவு | - | அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் சபையினால் ஆதன வரிக்காக புதிய கண்டுபிடிப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | 42,816,076 | சபைக்குச் சொந்தமான சகல காணி கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு தடவையேனும் பரீட்சிப்பிற்கு உட்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 88,103 | வழங்கப்பட்ட முற்பணம் உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், நீண்ட காலமாகக் கொண்டு வரப்படுகின்ற ரூபா 88,103 பெறுமதியான முற்பணத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 1647(ஆ) | - | சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற வாகனங்கள் மற்றும் அவற்றின் உதிரிப் பாகங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | - | கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் என்பன தொடர்பாக தனிப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | - | ஆதன வரிக்குரியதன் கீழ் வருகின்ற ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,669,511 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,859,798 ஆக இருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 6,045,660 | 3,666,322 | 5,139,522 | 2,157,052 | 5,031,550 | 3,775,832 | 7,612,794 | 3,632,713 |
| வாடகை | 1,975,870 | 650,507 | 739,171 | 32,500 | 2,587,875 | 634,725 | 1,527,425 | 99,726 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 391,500 | 122,000 | 121,000 | 1,000 | 324,000 | 185,650 | 501,265 | - |
| ஏனைய வருமானம் | 21,525,000 | 5,000,000 | 3,909,717 | 13,596,585 | 22,770,500 | 17,000,000 | 24,954,985 | 12,506,302 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சபையின் மொத்த நிலுவை வருமானம் ரூபா 16,238,741 ஆக இருந்ததுடன் ஆண்டின் சிட்டையில் ரூபா 9,438,829 ஆகும். ஆண்டின் பெறுவனவுகள், பதிவழித்தல்கள் மற்றும் சீராக்கங்கள் ரூபா 9,890,433 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 15,787,137 ஆகும்.

### 2.3.3 வீதவரியும் வரியும்

**ஆதன வரி**

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 3,568,371 ஆதனவரி நிலுவை ஒன்று காணப்பட்டதுடன் ஆண்டின் போது அந்த நிலுவையில் ரூபா 2,388,368 தொகை அதாவது 67 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்காக ஆதனவரி சிட்டையிடல் ரூபா 2,227,722 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 1,810,450 தொகை அதாவது 81 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.4 ஏனைய வருமானம்

**(அ) அறிவித்தல் பதாதை வருமானம்**

1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட உப விதி) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் எந்தவொரு அறிவித்தலையும் காட்சிப்படுத்தும் போது சபையின் செயலாளரால் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் மாத்திரம் காட்சிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான அதிகாரம் பெற்றுக்கொள்ளாமல் அறிவித்தல் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டிருந்த அறிவித்தல் பதாதை மற்றும் பெயர்ப்பலகைகளிலிருந்து ரூபா 276,112 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) மோட்டர் வாகனம் நிறுத்தி வைத்தல் கட்டணம்**

சபை அதிகாரப்பிரதேசத்தில் முச்சக்கர வண்டி நிறுத்தி வைக்கப்படும் இடங்களில் நிறுத்தி வைக்கப்படுகின்ற முச்சக்கர வண்டிகளில் இருந்து கட்டணம் அறவிடுவதற்காக உபவிதி ஒன்று விதித்து கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 18,379,490 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 13,596,585 ஆகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற

சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

சபையினால் 2017 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட வேலைகள் தொடர்பான விபரங்கள் சபையினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை.

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

(i) கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 8,039,060 தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் உக்கும் கழிவுகளுக்காக கூட்டுப்பசளை செயற்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. முழு சபை அதிகாரப் பிரதேசத்தையும் மேவுகை செய்யும் வகையில் கழிவுப்பொருட்களை சேகரித்தல் இடம்பெறாதிருந்ததுடன் கழிவுப் பொருள்வரி விதித்தலும் மேற்கொள்ளப்படவில்லை.

(ii) சபையினால் கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துவதற்கு சரியான மற்றும் போதியளவான திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக உப விதியும் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக சபை அறிந்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

**சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்**

(அ) 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபை மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்களை கையளித்தல் மற்றும் அதிகாரங்களை அமுல்படுத்தல் தொடர்பான ஆலோசனைக் கோவையில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் செயல்நடைமுறைகளின் பிரகாரம் சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுச் சென்ற அனேகமான கைத்தொழில்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திம் விநியோகிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்குரியதாக மூன்று சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தது. சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய கைத்தொழில்களை இனங்காண்பதற்கோ அல்லது உரிய சரியான மெய்மையாய்வொன்றோ சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

**(அ) ஊழியர் வெற்றிடம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட பதவியணியின் விபரங்களின் பிரகாரம் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி, முன்பள்ளிப் பாடசாலை ஆசிரியர் பதவி, இயந்திர செயற்படுத்துனர் பதவி மற்றும் இரண்டு களத்தொழிலாளர் பதவிகள் என்பன வெற்றிமாகக் காணப்பட்டன.

**(ஆ) ஊழியர் கடன்**

ஓய்வு பெற்றுச் சென்ற ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 4,552 ஆகும்.

### 3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

**(அ) ஆதனங்களை வாடகைக்கு வழங்கல்**

(i) சபைக்குச் சொந்தமான தொடங்கொட, சப்புகஹவத்த நேபட என்பவற்றில் 62 கடைகள் காணப்பட்டதுடன் இந்த கடைகளுக்காக புதிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு கடை வாடகை வருமானத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தொடங்கொட பொதுச் சந்தை கடைகளுக்குரியதான சகல உடன்படிக்கை காலமும் காலாவதியாகியிருந்ததுடன் அந்த உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்குப் பதிலாக, காணப்பட்ட பழைய உடன்படிக்கைகளில் வாடகைக் கால எல்லை மற்றும் சபைக்காக வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நபர்களின் பெயர் என்பன போலியாக மாற்றஞ் செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) பொருட் பதிவேடு**

பொருட் பதிவேடு எந்தவித மேற்பார்வையுமின்றி நடாத்திச் செல்லப்பட்டதுடன் சகல வருடங்களினதும் இறுதித் திகதியில் உள்ளவாறு பதிவேடு சமப்படுத்தப்பட்டு மீதி முன்கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும், சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற சொத்துக்கள் மற்றும் பதிவேடுகளின் சொத்துக்களுக்கும் இடையே இணக்கமற்ற நிலைமை அவதானிக்கப்பட்டது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 600,000 இனால் எப்லட்வத்த குடியிருப்பின் தனியார் காணியொன்றில் 02 பேர்ச்சில் நிர்மாணிக்கப்பட்ட பொதுக் கிணறுக்குரிய நிலத்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

(அ) மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் போம்புவல நூலகத்தில் இருந்து காணாமல் போன ரூபா 22,771 பெறுமதியான 220 புத்தகங்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கைளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் சிபாரிசுகளை 2018 மே 25 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தெபுவன, நேபட, போம்புவல, கமகொட, சோபிதகம மற்றும் அதிகாரிகொட என்ற சபை நூலகங்களினால் பொருட் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பழைய சபைக் கட்டிடத்தின் வளவில் காணப்பட்ட சகல பொருட்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்த போதும் அனேகமான பொருட்கள் எந்தவித களஞ்சிய பேரேட்டிலோ அல்லது பொருட் பதிவேட்டிலோ பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில், பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் 20 சதவீதம் முதல் 72 சதவீதம் வரையும், செலவினம் 19 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) வருமான நிர்வாகம் | (i) நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| | (ii) நிலுவை வருமான அறிக்கை / பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| (ஆ) ஊழியர் முகாமைத்துவம் | (i) வீதி மற்றும் களத் தொழிலாளர்கள் சரியான திட்டமுறையின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்படாமை |
| | (ii) ஊழியர் மேற்பார்வை நலிவான நிலையில் காணப்பட்டமை. |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே கணிசமான முரண்கள் காணப்பட்டமை |
| | (ii) வருமான மதிப்பீடு பொருத்தமானதாக இன்மை |